**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு - II - 2023**

---

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு - II இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையாக உள்ளதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2026 யூன் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லின் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக காட்டப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 65 | இந்தச் செலவினம் 2022 ஆம் ஆண்டின் செலவினமாகக் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் தவறுதலாக 2023 ஆம் ஆண்டின் செலவினமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிப்பதில் இந்த செலவினத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கூறு II மூலம் வழங்கப்படும் பாடசாலை அடிப்படையிலான கற்றல் செலவினம் திறன் அபிவிருத்தி செலவினமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேம்படுத்தல் மானியங்கள் | 144.2 | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றை தயாரிக்கும் போது இந்த கணக்கீட்டு பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 மே 20 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | பொது தினத்தினுள் கூட்டங்கள், கருத்தரங்குகள், விழாக்கள் நடாத்தப்படக் கூடாத போதிலும் பொது தினத்திலும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டிருந்தன. | திங்கட்கிழமைகளில் செயலமர்வுகளை நடாத்துவதைத் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. | விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டின் 96 ஆம் பந்தி | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்தில் இந்த செயற்திட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இந்த GEMP செயற்திட்டமும் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எட்டு நடவடிக்கைகள் ஊடாக வெளிநாட்டு செயற்திட்டத்தின் கீழ் செய்யப்படுவதற்கு திட்டமிடப்படுகிறது. | விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

எனினும், 2023 மே மாதத்தில் இந்த செயற்திட்டத்தின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கிய கணிதம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் கிளை தொடர்பாக உள்ளக கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கி அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள் | | |
| II | பாடசாலை மானியம் | 69 | 0 | 2022 திசெம்பர் 16 இல் 2022 ஆம் ஆண்டிற்காக 69 பாடசாலைகளுக்கு மானியங்கள் மூலம் வழங்கப்பட்ட ரூபா 50.2 மில்லியன் தொகையை செலவிடுதல் முடிவடைவதை 2023 ஆகஸ்ட் 31 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 69 பாடசாலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 50.2 மில்லியன் தொகை தொடர்பான நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 வரையிலும் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாடசாலைகளுக்கான நிதியை வைப்பு செய்வதில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** பாடசாலைகளுக்கான நிதியை வைப்பு செய்வதில் தாமதம் காரணமாக 2024 மார்ச் வரை மானியத்தின் கீழ் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு பாடசாலைகளுக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** செயற்திட்ட நிதிகள் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**3.2 செயற்திட்ட நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் கூறு I இன் கீழ் நிதியளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அமுல்ப்படுத்த வேண்டிய போதிலும் கூறு II இன் கீழ் பாடசாலைகளுக்கு ரூபா 144.2 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. | GEM செயற்திட்டத்தின் கீழ் பெரும்பாலான செயற்பாடுகள் பாடசாலை அடிப்படையிலான செயற்பாடுகளாக நடாத்தப்படுகிறதால் பாடசாலைகளும் செயற்பாட்டு செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை கொண்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு பாடசாலை அடிப்படையிலான கற்றல் மேம்பாட்டு மானியம் கூறு II ஐ பயன்படுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | செயற்திட்ட நோக்கத்தை நோக்கி நிதியிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிளைகள் மற்றும் அந்த கிளைகளின் நிறைவேற்று உத்தியோகத்தரின் கடமைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள துறைகளின் விடயம் தொடர்பான செயற்பாடுகளின் அதிகார எல்லைக்கு உட்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2 மில்லியன் தொகையான செலவினமானது திறன் அபிவிருத்தி செலவினமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | செயற்திட்ட DLIகள் மற்றும் தொடர்புடைய கிளைகளின் கடமைகள் கிட்டத்தட்ட ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதுடன் இதனை தனித்தனியாக இனங்காண முடியாது. எனவே, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி குறிப்பாக DLIகளுடன் தொடர்புடையதாகும். | செலவினங்கள் சரியாக முகாமை செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | குறித்த இலக்குகளை அடைந்துகொள்ளக் கூடிய வகையிலும் திட்டமிட்ட முறையிலும் பாடசாலை நிதியேற்பாடுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2023 செப்தெம்பர் 5 இல் 130 பாடசாலைகளுக்கு ரூபா 65 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கவனம் செலுத்தாமல் முறையே 2023 திசெம்பர் 29 இல் ரூபா 29 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், முன்னைய 02 ஆண்டுகளுக்குள் வழங்கப்பட்ட பாடசாலை நிதியேற்பாடுகளில் வெற்றிகரமான செயன்முன்னேற்றத்தை அவதானிக்க முடியவில்லை. | C2 இல் நிதி இல்லாததால், C2 இன் கீழ் SBLEG இற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்படாததுடன் SBLEG இற்காக C1 மூலம் ஒதுக்கப்பட்ட நிதிகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் (DLI) அடைந்துகொள்ளல் தொடர்பாக மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் அறிக்கை, கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டினை தொடர்ந்துவரும் ஆண்டின் பெப்ரவரி 28 இற்கு முன்னர் உலக வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த அறிக்கைகளின் சமர்ப்பிப்பு தொடர்பான மதிப்பீடுகள் 2024 மே மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | அதன் பிரகாரம், கொவிட் மற்றும் ஏனைய நெருக்கடி நிலைமை காரணமாக மூன்றாம் தரப்பு சரிபார்ப்பு தொடர்பான செயன்முறை தாமதமானதாகும்.<br><br>2023 ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கும், 2023 ஆம் கல்வியாண்டு 2024 பெப்ரவரியில் முடிவடைந்ததால், தற்போது மூன்றாம் தரப்பு சரிபார்ப்பு செயன்முறையில் உள்ளது. | உரிய காலத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது முன்னரும் அனுப்பப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |